ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2468/25 - 2025 දෙසැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2025.12.26
*2468/25 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் (143 ஆம் அத்தியாயம்)**

தொகை மதிப்புக் கட்டளைச் சட்டத்தின்(143 ஆம் அத்தியாயம்) 5 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் அபிவிரத்தி அமைச்சரினால் வரையப்பட்ட விதிகள்.

அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
`அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2025, திசெம்பர் 18 ஆந் திகதி.

**விதிகள்**

**பிரிவு 1 - ஆரம்பம்**

3. இவ்விதிகள், பொருளாதாரத் தொகை மதிப்பு 2025/ 26 (விவசாய நடவடிக்கைகள்) இன் விதிகள் என அழைக்கப்படும்.

4. இவ் விதிகளில் வேறுவித சம்பந்தமாக வரைவிலக்கணம் தேவைப்பட்டால் தவிர ''கட்டளைச் சட்டம்" என்பது தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் (143 ஆம் அத்தியாயம்) என்றும் "அத்தியட்சகர்" என்பது, தொகைமதிப்பு அத்தியட்சகர், "ஆணையாளர்" என்பது, தொகைமதிப்பு ஆணையாளர்களையும், "பிரதி ஆணையாளர்" என்பது, பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் "உதவி ஆணையாளர்" என்பது, உதவி தொகைமதிப்பு ஆணையாளர் (தொகைமதிப்பு அத்தியட்சகர் மற்றும் தொகைமதிப்பு ஆணையாளர்கள், 2025, ஓகத்து மாதம் 07 ஆந் திகதிய, 2448/38 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிக்கையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது) இவற்றிற்கு மேலதிகமாக தகவல் சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் 'தொகைமதிப்பு உத்தியோகத்தர்' எனவும் அழைக்கப்படுவர்.

1A - G 45976 — 13 (2025/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பிரிவு II - பொது**

4. பொருளாதாரத் தொகை மதிப்பு 2025/26 ஆம் ஆண்டுகளில் விவசாயத் தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும்.

| | செயற்பாடு | காலவரையறை |
|---|---|---|
| (ii) | ரெப்லெட் கணினிகள் மூலம், அன்ட்றொய்ட் (Android) திறன் பேசிகளைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல். | 2025 இன் நான்காம் காலாண்டு மற்றும் 2026 முதலாவது காலாண்டினுள் |

5. சகல நபர்களும், தமது வீட்டுக் கூறிற்கு/ நிறுவனத்திற்கு உரிய விவசாயத் தகவல்களை அதற்காக அத்தியட்சகர் அல்லது ஆணையாளரினால் உரிய கிராம அலுவலர் பிரிவிற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் வழங்க வேண்டும்.

6. அத்தியட்சகர் அல்லது ஆணையாளரினால் நியமிக்கப்படுகின்ற மேற்பார்வை உத்தியோகத்தரினால் தகவல் சேகரிப்பதற்கு உரிய சாதனங்களில் பதியப்படும் தகவல்களின் துல்லியத் தன்மைத் தொடர்பாக பரீட்சித்துப் பார்க்கப்பட வேண்டும்.

**பிரிவு III - தகவல் சேகரிக்கும் உத்தியோகத்தர்களின் கடமைகள்**

8. கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதாவது சட்டங்களின் மூலம் அத்தியட்சகரிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரம் அல்லது கடமை, அத்தியட்சகருடைய பொதுவான அல்லது விசேட கட்டளைப் பிரகாரம், பிரதித் தொகை மதிப்பு அத்தியட்சகரொருவரினால் நாடு முழுவதிலும், பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதித்/ உதவித் தொகை மதிப்பு அத்தியட்சகரினால் அந்த பிரதி/ உதவித் தொகை மதிப்பு அத்தியட்சகருக்கு குறித்த பிரதேசங்களினுள் செயற்பாட்டில் ஈடுபடவோ அல்லது நிறைவேற்றவோ முடியும்.

9. கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதாவது சட்டங்களினால் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரம் அல்லது கடமை, அப்பிரதேசத்தின் ஆணையாளருடைய பொதுவான அல்லது விசேட கட்டளைப் பிரகாரம், தான் நியமனம் பெற்றுள்ள பிரதேச எல்லைக்குள் செயற்பாடுகளில் ஈடுபடவோ அல்லது நிறைவேற்றவோ பிரதித்/ உதவித் தொகைமதிப்பு ஆணையாளரினால் முடியும்.

10. சகல கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களும் அத்தியட்சகர் அல்லது தான் கணக்கெடுக்கும் உத்தியோகத்தராக நியமித்துள்ள பிரிவுக்குப் பொறுப்பான ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளரினால் குறித்த தினங்களில் குறிப்பிட்ட இடத்திற்கு மற்றும் நேரத்திற்கும் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டும்.

11. தகவல் சேகரிப்பு நடவடிக்கைகளுக்காக அமர்த்தப்பட்ட கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களின் பொதுவாக அக்கடமை தொடர்பில் படிவம் ஒன்று பூரணப்படுத்துவதற்காக பெறப்பட்ட தகவல்களை சட்டப்படியான அதிகாரமில்லாமல் விளம்பரப்படுத்துதலோ அல்லது ஏனையோருக்கு தெரியப்படுத்தவோ கூடாது.

12. தகவல் சேகரிப்பு நடவடிக்கைகளுக்காக அமர்த்தப்பட்ட கணக்கெடுக்கும் உத்தியோகத்தரொருவரினால் கணக்கெடுப்பதற்குரிய ரெப்லட் கணினியினுள் உள்ள தகவலுக்குரிய படிவங்கள் அல்லது ஏனைய ஆவணங்கள் தங்களது பொறுப்பில் இருக்கும் வரை சட்டப்படி அதிகாரமற்ற எவருக்கும் காண்பிக்கக் கூடாது.

13. தகவல் சேகரிப்பு நடவடிக்கைகளுக்காக அமர்த்தப்பட்ட கணக்கெடுக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் தாம் சேவைக்கு அமர்த்தப்படும் போது கீழ்க்கண்ட சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப்பாட்டைச் செய்து கொண்டு அதன் கீழ்க் கையொப்பமிட வேண்டும்.

.............................. ஆகிய நான் ஆணையிட்டு/ பயபக்தியுடன் உறுதி கூறுவது யாதெனில், தொகைமதிப்புச் சட்டத்தின் தேவைகளுக்கும் அதன் கீழ் அடங்கும் சகல விதிகளுக்கும் அமைவாக நான் ................. ஆக எனது கடமைகளை உண்மையுடனும் நேர்மையுடனும் நிறைவேற்றுவேன் என்றும், தொகைமதிப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் காலத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விபரம் எதையும் உரிய அதிகாமின்றிப் பிரசுரிக்கவோ, வெளியிடவோ மாட்டேன் என்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.....................
கையொப்பம்.

எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

இடம் :........................
திகதி :.......................

............................
பிரதி/ உதவித் தொகைமதிப்பு ஆணையாளர்.

14. மேற்பார்வை உத்தியோகத்தர் பதவிக்கு குறையாத பதவியொன்று வகிக்கின்ற சகல தொகைமதிப்பு உத்தியோகத்தர்களும் முன் கூறப்பட்ட உறுப்புரைக்கு அமைவாக சத்தியப் பிரமாணம் அல்லது அத்தாட்சியை வெளிப்படுத்தும் படிவங்களை வேறொரு தொகைமதிப்பு உத்தியோகத்தர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

**பிரிவு IV - விவசாய நடவடிக்கைகளின் கணக்கெடுப்புக்காக பெற்றுக் கொள்ள வேண்டிய தகவல்கள்**

4. பொருளாதாரத் தொகைமதிப்பு (விவசாய நடவடிக்கைகள்) கணக்கெடுப்பிற்கான வினாக்கொத்தின் மூலம் பெறக்கூடிய தகவல்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) விவசாய நடவடிக்கைகளை அடையாளங்காண்பதற்கான பின்வரும் தகவல்கள்

(xi) கூறினால் 2024/25 பயிர்ச்செய்கை ஆண்டினுள் மேற்கொண்ட விவசாய நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் :

2024/25 பயிர்ச்செய்கை ஆண்டினுள் மேற்கெர்ளப்பட்ட பயிர்ச்செய்கைகள், 30.09.2025 ஆந் திகதிக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் 2024/25 பயிர்ச்செய்கை ஆண்டினுள் நிலத்துண்டுகளினுள் மேற்கொள்ளப்பட்ட நீர்வாழ் உயிரின உற்பத்தி

(xii) விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கூறுகளில் பிரதான விவசாய செய்கையாளர்களின் மற்றும் விவசாய கூறின் தகவல்கள் :

o. பால் நிலை .....................
p. பிறந்த திகதி ................
q. வயதுப் பிரிவு ................
r. விவாக அந்தஸ்து ................
s. கல்வித் தகைமைகள் ................
t. விவசாயத்திற்குரிய தொழிற்பயிற்சிகள் பெற்றுள்ளாரா ................
u. முக்கிய வருமான வழிகளின் தன்மை ................
v. பிற வருமான வழிகள் தொடர்பான தகவல்கள்
w. ஈடுபட்டிருந்த பிற பொருளாதார நடவடிக்கைகள் ................
x. இணையத்திலிருந்து விவசாய அறிவைப் பெறும் திறன் ................
y. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் சராசரி மணி நேரம் ................
z. விவசாய கூறில் வாடகைக்கு பணியமர்த்தப்பட்ட/ சம்பளம் பெறும் முகாமையாளர்கள் பற்றிய தகவல் ................
aa. விவசாய கூறிற்காக ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாற்ற நாட்களின் எண்ணிக்கை ................
bb. நிலைபேரான அபிவிருத்திக் குறிகாட்டிகளை (SDG Indicators) கணக்கிடுவதற்காக ஒவ்வொரு கூறிலிருந்தும் தோராயமாக தெரிவு செய்யப்பட்ட நபரிடம் இருந்து பின்வரும் தகவல்கள் சேகரிக்கப்படும்.
   - பெயர் ................
   - பால்நிலை ................
   - வயது ................
   - விவசாய நடவடிக்களையை மேற்கொள்வதற்கான நிலத்துண்டம் காணப்படுகின்றதா ................

- காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் உள்ளதா?................
- அந்த ஆவணத்தில் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா? ................
- விவசாய நிலத்தின் உரிமை தொடர்பான தகவல்கள் ................

(xiii) கூறிற்குச் சொந்தமான நிலத் துண்டங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் :

i. விவசாயக் கூறிற்குச் சொந்தமான மொத்த நிலத்துண்டங்களின் எண்ணிக்கை ................
j. நிலத்துண்டங்களின் பெயர் ................
k. நிலத்துண்டங்களின் அமைவிடம் ................
l. நிலத்துண்டத்தின் நிலவுடமை ................
m. நிலத்துண்டத்தின் மொத்த நில விஸ்தீரணம் ................
n. நிலப்பயன்பாடு மற்றும் அந்த பயன்பாட்டின் கீழ் உள்ள நில விஸ்தீரணம்

- வயல் தவிர்ந்த ஏனைய பருவகாலப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள் நில விஸ்தீரணம் ............
- நிரந்தர/ தற்காலிகப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள நில விஸ்தீரணம் ............
- பொருளாதாரக் காடாக்கத்துடனான நில விஸ்தீரணம் ............
- கால்நடை வளர்ப்பை மேற்கொள்ளும் நில விஸ்தீரணம் ............
- நீர்வாழ் உயிரின உற்பத்திக்காக கட்டப்பட்ட தடாகம் மற்றும் நீர்த்தேக்கங்களின் கீழ் உள்ள நில விஸ்தீரணம் ............
- தற்காலிகமாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாமல் உள்ள நில விஸ்தீரணம் ............
- பற்றைக்காடுகள்/ இயற்கை புல் நிலங்களின் கீழ் உள்ள நில விஸ்தீரணம் ............
- பயன்பாடற்ற நிலங்களின் (கற்பாறைகள்/ சேற்றுநிலம்) நில விஸ்தீரணம் ............
- கட்டிடங்கள்/ பாதைகள் என்பவற்றின் கீழ் உள்ள நில விஸ்தீரணம் ............
- வேறெங்கும் குறிப்பிடப்படாத நில விஸ்தீரணம் ............

o. கூறில் வீட்டுத்தோட்டத்தில் ஏதேனும் உணவுப் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா ...........................................

p. 2025, செத்தெம்பர் 30 ஆந் திகதி ஆகும் போது இந்த விவசாய கூறிற்குச் சொந்தமான எந்தவொரு நிலத்துண்டமும் வேறொரு தரப்பினருக்கு வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதா ................

- 2025, செத்தெம்பர் 30 ஆந் திகதி ஆகும் போது இந்த விவசாய கூறிற்கு சொந்தமான ஆனால் வேறொரு தரப்பினருக்கு வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நில விஸ்தீரணம் .........

(xiv) வயல் மற்றும் ஏனைய பருவகால பயிர்கள் தொடர்பான தகவல்கள் :

h. பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் போகம் ................
i. விவசாய கூறினுள் பருவக்கால பயிர்ச்செய்கைக்கான நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனரா மற்றும் பயன்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்ப முறைமைகள்
j. பயன்படுத்தப்பட்ட நீர்ப்பாசன முறைகள் :
k. விவசாய கூறினுள் பசளை பயன்பாடு :.............................
l. பயிர்ச்செய்கை ஆண்டினுள் பசுமை, இல்லத்தில் பயிரிடப்பட்டால் பயிரிடப்பட்டுள்ள நில விஸ்தீரணம் எவ்வளவு :............................
m. பயிரிடப்பட்டுள்ள பயிர்ச்செய்கை வகைகள் :.................................
n. அந்த பயிர்ச்செய்கை வகை பயிரிடப்பட்டுள்ள நில விஸ்தீரணம் :.............

(xv) வயல் நிலம் தொடர்பான தகவல்கள் :

c. கடந்த ஐந்து வருட காலத்தினுள் பண்படுத்தப்பட்ட நில விஸ்தீரணம் ................
d. தரிசு நெல் வயல்களின் (ஐந்து ஆண்டுகளில் குறைந்தது ஒரு பருவமாவது பயிரிடப்படாத நெல் வயல்கள்) நில விஸ்தீரணம் .....................

(xvi) நிரந்தர/ தற்காலிக பயிர்ச்செய்கை தொடர்பான விபரங்கள் :

h. பயிரிடப்பட்ட பயிர்ச்செய்கை வகை ...............

i. பயிர்கள் முறையாக பயிரிடப்பட்டுள்ளதா/ விசிறி பயிரிடப்பட்டுள்ளதா?
j. முறையாகப் பயிரிடப்பட்ட மொத்த நில விஸ்தீரணம் ..............
k. முறைசார் பயிர்ச்செய்கையின் கீழ் பயன்பதரும் நில விஸ்தீரணம் :............................
l. விசிறல் பயிர்ச்செய்கையின் கீழ் உள்ள மொத்த மரங்களின் எண்ணிக்கை :...........................
m. விசிறல் பயிர்ச்செய்கையின் கீழ் உள்ள மொத்த பழங்களைத் தரும் மரங்களின் எண்ணிக்கை :............ ....................
n. பசளை/ கிருமி நாசினிகள்/ பூச்சி நாசினிகள்/ களை நாசினிகள் என்பவற்றின் பயன்பாடு :.............

(xvii) 2025, செத்தெம்பர் 30 ஆந் திகதிக்கான கால்நடை வளர்ப்பு தொடர்பான தகவல்கள் :

h. கால்நடை வகை ...............
i. ஒவ்வொரு வகையிலும் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை ..............................
j. கால்நடை வளர்ப்பு முறை:...................
k. பசுக்கள்/ எருமைகள் பற்றிய தகவல்கள் :............................
l. ஆடுகள் பற்றிய தகவல்கள் :...........................
m. பன்றி வளர்ப்பு பற்றிய தகவல்கள் :.................................
n. கோழி வளர்ப்பு பற்றிய தகவல்கள் :............

(xviii) நீர்வாழ் உயிரின உற்பத்தி தொடர்பான தகவல்கள் :

e. உற்பத்தி செய்யப்பட்ட நீர்வாழ் உயிரின வகைகள் ...............
f. நீர்வாழ் உயிரின உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட நீரின் தன்மை ..............................
g. நீர்வாழ் உயிரின உற்பத்தி முறைகள் :...................
h. ஈடுபட்டுள்ள நீர்வாழ் உயிரின உற்பத்தி நடவடிக்கைகள் :............................

(xix) கூறில் பயன்படுத்தப்படுகின்றன/ கூறிற்குச் சொந்தமான விவசாய இயந்திர சாதனங்கள் தொடர்பான தகவல்கள் :

e. பயன்படுஞத்தப்படட் விவசாய இயந்திரங்கள் ...............
f. பயன்படுத்தப்பட்ட விவசாய இயந்திரங்களின் உரிமையின் தன்மை ..............................
g. உரிமை விவசாயி கூறிற்கு சொந்தமாக உள்ள விவசாய இயந்திரங்களின் எண்ணிக்கை :...................

(xx) நிறுவனங்களின் நிரந்தர உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள்:

h. பாலின அடிப்படையில் 10 தொழில் வகைகளுக்கு உட்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை

5. கணக்கெடுக்கும் உத்தியோகத்தர் தமது கிராம அலுவலர் பிரிவினுள் உள்ள சகல வீட்டுக் கூறுகள்/ நிறுவனங்களுக்குச் சென்று இதன் I ஆம் பிரிவின் விதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு உரிய வினாக்களை வினவி, தொகைமதிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களைப் பெற முடியும்.

6. அத்தியட்சகரினால் பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நபர்களிடம் இருந்து விவசாய நடவடிக்கை தொடர்பாகப் பெற்றுக் கொள்ளும் தகவல்களை எந்தவொரு நபரிடமும் மீண்டும் விசாரித்து அறிந்து கொள்வதற்குத் தொகைமதிப்பு உத்தியோகத்தருக்கு முடியும்.

4. இதன் I ஆம் பிரிவின் விதிகளுக்கமைவாக காணப்படும் விடயங்கள் எவரேனும் நபரொருவருக்காக தொகைமதிப்பின்போது அறிக்கையிடப்பட்டுள்ளதா என திருப்தியடையும் பொருட்டு, இதன் I ஆம் பிரிவின் சட்டதிட்டங்களுக்கமைவாகக் காணப்படும் அனைத்து விடயங்கள் அல்லது பல அறிக்கையிடப்படுவதன் பொருட்டு தேவைப்படுவதால் அவருடைய மற்றும் அவருடைய குடும்ப அங்கத்தவர்களின் விவசாய நடவடிக்கைகள் தொடர்பான கேள்விகளை தொகைமதிப்பு உத்தியோகத்தருக்கு கேட்க முடியும் என்பதுடன் அக்கேள்விகளுக்கான விடையளிப்பது குறித்த நபரின் கடமையாகும்.

EOG 12-0229